★ காமினி திஸநாயக்க சொல்கிறார்

# ஸ்ரீமாவோவுடன் உடன்படிக்கை இல்லை

## யூ.என்.பி கூட்டத்தில் பேசுவார்

'நான் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவன். நான் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியிலேயே இருப்பேன்'' இவ்வாறு முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார். ''ஐக்கிய தேசியக் கட்சியில் சிரேஷ்ட அங்கத்தவராக இருபது வருடங்கள் சேவையாற்றியுள்ளேன். நான் எவ்வித தவறும் புரியாததால், இலங்கை வந்தால் கைதுசெய்யப்படுவேனென அறிந்தும் இங்கு வந்தேன்.'' ''நான் அநுர பண்டாரநாயக்காவுடனோ, ஸ்ரீமாவுடனோ எவ்வித அரசியல் உடன்படிக்கையும் செய்யவில்லை. எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஐ. தே. கட்சிக்காகப் பிரசாரம் செய்வேன்'' எனவும் அவர் கூறினார்.

பக்கங்கள் நான்கு

விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 153 பிரசோற்பத்தி சித்திரை 17 (30-04-1991) செவ்வாய்

# மன்னாரில் பாரிய தாக்குதல்

# 60 இராணுவத்தினர் பலி!

## 12 நிமிடங்களில் இரு படையணிகள் முற்றாக அழிப்பு

**மன்னார் மாவட்டத்தில் ரோந்துசென்ற ஸ்ரீலங்கா இராணுவத்தின் இரு படைப்பிரிவுகள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய பாரிய தாக்குதலில் 60 படையினர் கொல்லப்பட்டனர்.**

நேற்றுக்காலை 7.47 மணியளவில் நானாட்டானில் இருந்து வங்காலை நோக்கி இந்த இரு படைப் பிரிவுகளும் வாகனங்களில் சென்றுகொண்டிருந்த போது நானாட்டானில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள வஞ்சியன்குளம் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர்.

சுமார் பன்னிரண்டு நிமிடங்களே இத்தாக்குதல் நடைபெற்றது. இதனால் அப்படையணிகளில் இருந்த அனைத்து சிப்பாய்களும் பலியாகினர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் 2 ம் லெப் சோனேல் (பிரான்ஸிஸ் சிவகுமார் கொழும்பு) ரோகன் (மன்னார்) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதங்களின் விவரம்:

★ ஏ. கே. எல். எம். ஜி -4
★ ரம் மகஸீன் - 17
★ ஏ. கே. எல். எம் ஜி ரவைகோர்வை - 1575
★ ரி- 56 துப்பாக்கிகள் - 23

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வான் மீது தாக்குதல்

## மூன்று படையினர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் வான் ஒன்றில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

நேற்று முன்தினமிரவு 36-ம் கிராமத்தில் இருந்து 4 இராணுவத்தினர் வானில் 19-ம் கட்டை முகாமுக்குச் சென்றனர்.

19-ம் கட்டை முகாமி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## 18மாவீரர் புகழுடல்கள் தீயுடன் சங்கமம்

ஆனையிறவு மோதலில் வீரமரணமடைந்த 18 போராளிகளினதும் புகழுடல்கள் கிளிநொச்சியில் பல்வேறு இடங்களில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான மக்கள் இரவிலும்கூடி அஞ்சலிசெலுத்தினர் நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் மாவீரர் மயானத்தில் புகழுடல்கள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## புளொட் குழு உறுப்பினர் மிதிவெடியில் சிக்கி பலி

தாண்டிக்குளத்தில் மிதிவெடி வெடித்ததில் புளொட் குழுவினரில் ஒருவர் பலியானார்.

மிதிவெடிகளை வீதியில் வைத்துவிட்டு திரும்பி வந்து அவற்றை எடுக்கும் போது அவை வெடித்தன.

இதேவேளை கடந்த சனி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஐ. நா. லொறி எரிப்புக்கு விசாரணை நடத்தப்படும்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய லொறி கடந்த சனிக்கிழமை வவுனியாவில் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து கட்டுப்பபைத் தலைமையலுவலகத்துடன் ஐ நா. பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியுள்ளதாகக்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு முகாம் அருகில் மேலும் ஆயுதங்கள் மீட்பு

ஆனையிறவில் வெளியேற முயன்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தி விரட்டிய பகுதிகளில் மேலும் சில படையினரது ஆயுதங்கள் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

ரி-56-1, 7·62×39 ரவைகள்-1200, ரி-81 ரவைகூடு-12, ஆர். பி. ஜி ஷெல்-4, 60 எம். எம் மோட்டார்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தில்

## 4லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தேங்கியுள்ளன

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சுமார் நாலு இலட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் காரைநகர் மடக்கிலுள்ள சங்கத்தின் எழு கிளைகளில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சுழிபுரம் வழக்கம்பரையில் செயற்பட்டு வரும் சங்கத்தின் தலைமை அலுவலகத்திற்கு இப்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கல்வி நிர்வாக சேவை IIIற்கு இலங்கை தமிழருக்கு இடமில்லை?

அண்மையில் நடைபெற்ற கல்வி நிர்வாக சேவை IIIற்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியவர்களிடமிருந்து அவர்களது பிறப்புச் சான்றிதழ் பிரதியை அனுப்புமாறு நிர்வாக சேவை ஆணைக்குழு கோரியுள்ளது.

இலங்கைத் தமிழரா அல்லது இந்திய தமிழரா என

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பிரட்மன் சீனா விஜயம்

ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் சீனாவிற்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ் விஜயத்திற்கான காரணங்கள் மிக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

## கட்டுத்துவக்கு வெடித்து காயம்

மிருகங்களை வேட்டையாடுவதற்காக கட்டுத்துவக்கை சரிபார்த்த வேளை தவறுதலாக வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இவ்வாறு படுகாயமடைந்த கிளிநொச்சி மருதநகரைச் சேர்ந்த பழனிமுத்து அருணாசலம் (52) யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தவறணைகளை பூட்டக்கோரிக்கை

வடமாகாண தென்னை பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், தனது அங்கத்துவ சங்கங்களை மேதினத்தன்று தமது இணை நிலையங்களான தவறணைகளில், கள் கொள்வனவு விற்பனவை நிறுத்தி, அன்றைய உற்பத்தியை மறு நாள் கொள்வனவு செய்து விற்பனவு செய்யும்படி கேட்டுக்கொள்கின்றது.

## இராணுவம் திரும்பியது

ஊர்காவற்றுறை இராணுவத்தினர் பொதுமக்களை முன்னே விட்டு புளியங்கூடல் சந்தி நோக்கி வந்தனர் இவர்கள் மீது புலிகள் தாக்குதல் நடாத்தியதையடுத்து படையினர் திரும்பிச் சென்று விட்டனர். (71)

## அழைப்பு

### ஊழியருக்கு

லங்கா சீமெந்துநிறுவனத்தில் தொழில்புரியும் தொழிற்சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் 1 ஆம் திகதி புதன் கிழமை 8 மணிக்கு கன்னாகம் புகையிரத நிலைய வீதியில் அமைந்திருக்கும் லங்கா சீமெந்து அலுவலகத்தில் கூடுமாறு பதில் தலைவர் தருமராஜா அறிவித்துள்ளார். (ப-11)

★ ★

### மாணவர்களுக்கு

யாழ் மாவட்ட முறைசாராக் கல்விப் பிரிவும் போதனாசிரியர்கள், மாணவர்கள், முதலுதவி நிலையங்களின் சகல உறுப்பினர்களையும் நாளை காலை 8.00 மணிக்கு யாழ் மருதனாமடம் இராமநாதன் கல்லூரிக்கு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## இலங்கை ஆயுதக் கொள்வனவுக்காக புதிய நாடுகளைத் தேடியலைகின்றது

இலங்கை அரசு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு புதிய நாடுகளைத் தேடுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த வருடம் யுத்தம் ஆரம்பித்த பின்னர் சலுகை விலையில் ஆயுதங்களை வாங்குவதற்கு ஈராக்குடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி ஈராக்கிடமிருந்து ஆயுதங்களும் வந்தன. ஆனால் வளைகுடா யுத்தம் ஆரம்பித்ததையடுத்து ஈராக்கிடமிருந்து ஆயுதங்களை இலங்கை பெறமுடியவில்லை. இதனையடுத்து இலங்கை அரசு இந்தோ

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வணக்கத்துக்குரியவர்

எங்கள் மண்ணின் நிகழ்வினை
தங்கள் கண்களால் பார்த்தும்
எதிரிக்கு எடுபிடி செய்பவர்
காட்டிக் கொடுப்பவர் இதயமற்றவரே.

அரக்கரின் செயல்களை வேருடன்
அகற்றிட, ஆயுதம் எடுத்தவர்,
சுகங்களை துறந்தவர் எங்களைக்
காப்பவர், இரக்கம் உள்ளவரே.

கொடுமைகள் கண்டு துடிப்பவர்
நாட்டினால் ஓடாது நிற்பவர்
புலியினில் சேர்ந்தெமை காப்பவர்
எங்கள் வணக்கத்துக் குரியவரே,

பைப்

## யாழ் மாவட்டத்தில் மேலும் 24 பேர்
## அதிபர் தரம் இரண்டிற்குப் பதவியுயர்வு

யாழ் மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றுவதற்காக அதிபர் சேவைகள் தரம் இரண்டிற்கு மேலும் 24 பெயர்களைக் கொண்ட பட்டியல் ஒன்றினை கல்விச் சேவைகள் ஆணைக்குழு யாழ் கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் பல பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதால் இவர்களின் நியமனத்தைக் கொண்டு இவ்விடங்கள் பூர்த்தியாக்கப்படும் என கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ப10)

## ஆசிரியர்களின் நலன்களைக் கவனிக்க 'ஆசிரியர்சேவை' உருவாகிறது

ஆசிரியர்களின் நலன்களைக் கவனிப்பதற்னெ "ஆசிரியர் சேவை" என்ற புதிய அமைப்பொன்று உருவாக்கப்படவுள்ளது

ஆசிரியர்களின் பதவியுயர்வு, இடமாற்றம் மற்றும் இதர நலன்களைக் கவனிக்கவென இப் புதிய 'ஆசிரியர் சேவை' உருவாக்கப்படுகிறது.

## குவைத்தில் அரச ஊழியர்களுக்கு யுத்த இழப்பீடாக 4 மாதச் சம்பளம்

குவைத்தில் கடமைபுரியும் அரச ஊழியர்களுக்கு யுத்த இழப்பீடாக நான்கு மாதச் சம்பளம் மேலதிகமாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன் குவைத் மீது ஈராக் ஆக்கிரமித்ததன் பின் கொண்டுவரப்பட்ட பணமாற்றக் கட்டுப்பாடுகளும் தற்பொழுது நீக்கப்பட்டுள்ளன.

## நாளை தொழிலாளர் தினத்தன்று இணக்கமன்று விசாரணைகள் நிறுத்தம்

சகல இணக்கமன்று உறுப்பினர்களும், உதவியாளர்களும், பொறுப்பாளர்களும் தங்கள் பகுதிப் பிரதேச அரசியல் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு மேதின ஊர்வலத்திலும், கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ நீதி நிர்வாகம் பிரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

அத்துடன் மேதினத்தன்று எதுவிதமான இணக்கமன்று விசாரணைகளும் நடைபெறாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக பிறப்புவிகிதம் அதிகரிப்பு!
## கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை

தமிழ் நாட்டில் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளதாக திருச்சியில் தமிழக தலைமைச் செயலர் ரி. வி. அந்தோனி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பிறப்புவிகிதம் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதை யடுத்தே இந்த நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாம்.

1981 இல் 1000 க்கு 28 என்ற விகிதத்தில் இருந்த தமிழக பிறப்பு விகிதம் 1991 இல் 22.7 ஆகக் குறைந்து தற்பொழுது மீண்டும் 23 1 விகிதமாக உயரத் தொடங்கியுள்ளது.

## மலத்தியோன் இல்லை மலேரியா பரவுகிறது

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள முள்ளியான், ஆழியவளை, செம்பியன்பற்று, அம்பன் கிராமங்களில் அமைந்திருந்த மலேரியா தடை இயக்க நிலையங்கள் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக மூடப்பட்டிருப்பதினால் வடமராட்சி கிழக்குப் பகுதியில் மலத்தியோன் தெளிக்கும் வேலை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பெருமாலான மக்களுக்கு மலேரியாக் காய்ச்சல் பீடித்துள்ளது.

முள்ளியான், அம்பன் மத்திய மருந்தகங்களிலும் மருதன் கேணி கிராமிய வைத்தியசாலையிலும் மலேரியாக் காய்ச்சலுக்குரிய மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (18)

## அலுவலகங்கள் பாதிப்பு

மன்னார்த் தீவில் பல அரச அலுவலகங்களில் வழமையான வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

வெளிமாவட்ட அரச ஊழியர்கள் பலர் மன்னார்த்தீவை விட்டு வெளியேறி இருப்பதாலே அலுவலகங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (17)

## மேதின விழாவில் தபால் ஊழியர்

நாளை நடைபெறும் மேதினவிழாவில் கலந்துகொள்வதற்குச் சகல தரத்திலான தபால் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரையும் நாளை காலை 7 மணிக்கு யாழ் பிரதம தபாலகத்துக்குச் சமூகந் தரும்படி தபால் திணைக்களத் தொழிற்சங்கப் பேரணி கேட்டுள்ளது. (33)

## இருதயநோயை இல்லாதொழிக்க வெள்ளைப்பூடு சிறந்த மருந்து!

வெள்ளைப்பூடு இருதய நோயை இல்லாதொழிக்க சிறந்த மருந்து என அமெரிக்கப் பல்கலைக்கழக வைத்தியபீடப் பேராசிரியர் மோசிர் தெரிவித்துள்ளார்.

கறிவகைகளை சுவையாக்கப் பயன்படுத்தப்படும் வெள்ளைப்பூடு மனித உடம்பிலுள்ள கொழுப்பைக் குறைத்து, அதனால் ஏற்படும் இருதய நோயை இல்லாதொழிக்கிறது எனப் பேராசிரியர் மோசிர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜெந்துக்களின் விஷத்தை இல்லாதாக்கும் ஆற்றலும் இந்த வெள்ளைப்பூடுக்கு உண்டாம்.

## நாளை மேதின எழுச்சி ஊர்வலம்
## மருதனாமடத்தில் பெரிய பந்தல் அமைப்பு

மேதினப் பேரணியில்கலந்து கொள்ளும் தொழிலாளர் வர்க்கத்தினரையும் பொது மக்களையும் வரவேற்பதற்காக மருதனாமடம் சந்தி தயாராகின்றது.

இதற்காக சுமார் 75 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட பிரமாண்டமான பந்தல் ஒன்று அங்கு அமைக்கப்பட்டுள்ளது.

நாற்சந்திகளிலும் குறுக்கே சிவப்பு மஞ்சள் சவர்ணக் கொடிகள் பறந்தவண்ணம் இருக்கின்றன.

பொதுமக்களுக்கு வசதியாக இப்பகுதியில் சுற்றாடல் துப்புரவு செய்யப்படுகின்றது. மிகவும் கோலாகலமாக இப் பகுதி காணப்படுகின்றது. ப-10

## பயிற்சி நெறி நேற்று ஆரம்பம்
## படித்த யுவதிகளுக்கான

திருநெல்வேலி அரசினர் மாவட்ட விவசாயப் பண்ணையில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் யுவதிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான லேசிக் பயிற்சி நெறி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இப் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார்.

யுவதிகளுக்கு தையல், மனையியல், கைப்பணி, மிருகபரிபாலனம், விவசாயம் போன்ற துறைகளில் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. 33

## வெற்றி தோல்வியின்றி முடிவுற்ற உதைபந்தாட்டம்

கடந்த வருடத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களுக்குப் பரிசில்களை வழங்குமுகமாக யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் ஒழுங்கு செய்யப்பட்ட உதைபந்தாட்டப்போட்டி நேற்று முன்தினம் குருநகர் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற பொழுது வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

கடந்த வருட சாம்பியன்களாகக் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மோதிய தெரிவு செய்யப்பட்ட அணி ஆட்டம் ஆரம்பமாகி 43 வது நிமிடத்தில் 'கோணர் கிக்' மூலம் ஒரு கோலைப் போட்டு முன்னணியில் திகழ்ந்தது. ஆனால் ஆட்டம் முடிவடைவதற்கு 4 நிமிடங்கள் இருக்கையில் பாடும்மீன் அணி வெகு சாதுரியமாக ஆடி ஒரு கோலைப் போட்டு கோல்க் கணக்கை சமப்படுத்திக் கொண்டது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராகப் பங்குத்தந்தை வண. பிதா பீ. எம். இம்மனுவேல் அடிகளார் பரிசில்களைவழங்கினார். (16)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 | 03 |
| 02 | 05 |
| 1944 | 1988 |



### அமரர் செல்லையா இராசரத்தினம்

(கெமிக்கல்ஸ் இராசரத்தினம்)

திதி 30-04-1991

சிரசைத் தலை நிமிர்ந்து நேராக நின்றமரம்
வேரோடு சாய்ந்தின்று ஆண்டு மூன்றானதம்மா
நீராக மோராக நீள் தரையில் நின்செயல்கள்
பாரோடு பரந்துள்ள பாலை படிவாள் பணியோ!

மீசாலை தெற்கு, மீசாலை. தம்பி செல்லையா கணபதிப்பிள்ளை

04132

## தவறிவிட்டது

வேலுப்பிள்ளை சுதாகரன், 'சந்தகிரி' பொற்பதிவிதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் பெயர் விலாசமுள்ள தேசிய அடையாள அட்டை (இல. 661626870V) நொச்சி மோட்டைக்கும் சங்குப்பிட்டிக்குமிடையில் கடந்த 25.3.91 ல் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து மேற்படி விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

04136

## ஓராண்டு நினைவு அஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 | 10 |
| 02 | 05 |
| 1932 | 1990 |



### அமரர் மு. கதிரவேலு

(தம்பிராய் - பூநகரி)

எமது அன்புத் தெய்வமே ஆண்டொன்று
சென்றாலும் ஆறாது எம்மனம் மாறாத
உங்கள் நினைவு உங்கள் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பூநகரி
30-04-91

தங்கள்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

04135

# பங்களாதேஷைக் கலக்கும் வயிற்றோட்டம்!

## இதுவரை 1650க்கும் அதிகமானோர் அங்கு பலி

பங்களாதேஷில் வயிற்றுப் போக்கு மிக வேகமாகப் பரவி வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

இங்கு வயிற்றுப் போக்கினால் இதுவரை 1650 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 800 பேர் கடந்த நான்கு மாதங்களில் மட்டும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இதுதவிர ஆயிரக்கணக்கானோர் வயிற்றுப் போக்கு நோயினால் பங்களாதேஷில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷின் கரையோரப் பகுதிகளிலேயே வயிற்றோட்டநோய் மிக வேகமாகப் பரவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நான்கு தமிழக மீனவர்கள் கச்சதீவுக்கருகில் கடற்படையால் கைது!

இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற நான்கு தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து கொண்டு சென்றுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் கச்சதீவுக்கு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருக்கையில் இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

## புலிகளால் விரட்டியடிப்பு

வடமராட்சிக் கடற் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் விசைப் படகுகளின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதனால் மீனவர்கள் பலத்த பாதிப்புக்களை யடைந்துள்ளனர்.

வல்வைக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி வரமுயன்ற கடற்படை விசைப்படகு மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்திக் கடற்படை விசைப் படகைத் துரத்தியதும் குறிப்பிடத்தக்கது. (15)

## இத்தாலிய அரசின் சூப் தென்பகுதி மாணவர்களுக்கே!

இத்தாலிய அரச பாடசாலைப் பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்க முன்வந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வறிய பிள்ளைகளின் போஷாக்கை விருத்தி செய்யும் நோக்குடன் வழங்கப்படும் இப்பணத்திற்கு ''சூப்'' வழங்கப்படவுள்ளது.

இலங்கையில் குருநாகல், அம்பாந்தோட்டை மாவட்டங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே இத்தாலிய அரசு வழங்கும் இந்த சூப் வழங்கப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கம்பியூட்டர் கல்வித்துறைக்குத் தேசிய மட்டத்திலான பரீட்சை!

கம்பியூட்டர் கல்வித்துறைக்கென தேசிய மட்டத்திலான பரீட்சையொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது தனிப்பட்ட நிறுவனங்களினாலேயே கம்பியூட்டர் துறைக்கான பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன.

ஒரே சீரான தரத்தைப் பேணும் வகையிலேயே தேசிய மட்டத்திலான பரீட்சை நடாத்தப்படவுள்ளதாகவும், இந்தவகையிலான முதலாவது பரீட்சை யூன் மாதம் நடாத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## இந்தியக் கடற்படையால் 12 பங்களாதேஷ் மீனவர் கைது!

பங்களாதேஷின் பன்னிரண்டு மீனவர்களை இந்திய கடற்படை கைது செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வங்கக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இவர்களை இந்தியக் கடற்படையினர் கைதுசெய்து கொண்டு சென்றுள்ளதாக சக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சர்வதேச ஆசிரியர் தினம் அக்டோபர் 6 இல் கொண்டாடப்படும்

சர்வதேச ஆசிரியர் தினம் அக்டோபர் மாதம் 6ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் அக்டோபர் மாதம் 6 ஆம் திகதி வரை நாடு முழுவதும் விசேட நிகழ்ச்சிகள் நடாத்தப்படவுள்ளன.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டுக் கொடித் தினமும், ஞாபகார்த்த முத்திரை வெளியிடலும் இடம்பெறவுள்ளன.

## ஒலிம்பிக்தலைவராக தமிழர் தேர்வு

இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் புதிய தலைவராக தமிழகத்தைச் சேர்ந்த வி. சிவந்தி ஆதித்தன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சுக்கத்தாவில் நேற்று முன்தினம் புதிய தலைவர் தெரிவு இடம்பெற்றது.

## அநாதரவான சடலம் மீட்பு

சாவகச்சேரி- பெருங்குளம் சந்திப் பகுதியில் வயல் வெளி கிணறு ஒன்றிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மிகவும் பழுதடைந்திருந்த இச் சடலம் அடையாளம் காணப்படவில்லை. (ப-32)

## இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் நேற்று கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டன

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தற்போது நடைபெற்று வரும் க. பொ. த. உயர்தர விசேட பரீட்சைக்கான இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் நேற்று கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் படுகின்றது.

வழமைக்கு மாறாக இம்முறை வினாத்தாள்கள் இரு பிரிவுகளாககொழும்பிலிருந்து இங்கு அனுப்பிவைக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் இலங்கையர் கைது

சிங்கப்பூருக்கு செல்வதற்கு தயாராகவிருந்த மூன்று இலங்கைத்தமிழர்கள் சென்னை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் பெண்மணியாவார். எயர் இந்திய விமானத்தில்பயணம் செய்யத் தயாராகவிருந்த வேளையிலேயே இவர்கள் மூவரும் கைது செய்யப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கடைத் தெருவில் மக்கள் இல்லை

மன்னார் நகரில் உள்ள கடைத்தெருப்பகுதி தொடர்ந்தும் வெறிச் சோடிய நிலையில் காணப்படுகின்றது.

இப்பகுதியில்உள்ள கடைகள் எதுவும் திறக்கப் படவில்லை.

## கிளைக்குழு தெரிவுத் தேர்தல்

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இருபது கிளைகளுக்கும் கிளைக் குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு வைகாசி மாதம் 4 ஆம் திகதி நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட விருக்கின்றன.

போட்டி நடைபெறவிருக்கும் கிளைகளில் தேர்தல் வைகாசி மாதம் பதினோராம் திகதி நடைபெறவிருக்கின்றது. (18)

## சுழல மறுக்கும் மின் விசிறிகள்

### பனை ஓலைக்கு அடிக்கிறது யோகம்!

பனையோலை விசிறிகளுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தற்போது இவை காலமாகவுள்ளதால் வீடுகளில் மாத்திரமின்றி அரச உயர் அதிகாரிகளின் காரியாலயங்களில் கூட இவ் விசிறிகளே பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

வடபகுதியில் மின்சாரத் தடையின் காரணமாகவே உள்ளூர் உற்பத்தியான இவ் விசிறிகளுக்கு மதிப்பு அதிகரித்துள்ளது. (30)

# 'மே-1 சுதந்திர விடுதலை உணர்வுகளுக்கு வித்திட்ட நாள்'

''மே நாள் தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திர விடுதலை உணர்வுக்கு வித்திட்ட நாள்'' என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வெளியிட்டுள்ள ''மே-1 உழைப்பாளர் எழுச்சி நாள்'' என்ற இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

நூறு ஆண்டுகளுக்குமுன் 8 மணி நேரவேலை நாளைப் போராடிப் பெற்ற தொழிலாளர்கள் அதனையடுத்து மேலும் பல உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் புரிந்த தியாகம். கொடுத்தவிலை கொஞ்ச நஞ்சமல்ல 8 மணி நேர வேலை நாளையடுத்து ஞாயிற்றுக்கிழமைகளில் வார விடுமுறை. சனிக்கிழமைகளில் அரை நாள் வேலை. சம்பள விடுப்பு. சாப்பாட்டுக்கு இடைநேர ஓய்வு. விபத்துக்களுக்கு இழப்பீட்டுத்தொகை. குறைந்த பட்ச சம்பளவரம்பு. ஓய்வூதியம். தொழிற்சங்க உரிமை. உழைக்கும் பெண்களுக்கு பேறுகால விடுப்பு வசதி. பேறுகால உதவி. குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள்போன்ற பல உரிமைகளை உலகத் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் இன்று பெற்றிருக்கின்றனர்.

சோவியத்யூனியன் போன்ற சோசலிச நாடுகளில் தொழிற்சங்கங்கள் உயர்ந்த அதிகார பீடங்களாக இருக்கின்றன. சோவியத் யூனியனில் மக்கள் தொகையில் அரைப்பங்கினர் தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். அங்கு நிர்வாகமும் தொழிற்சங்கமும் சமமாக மதிக்கப்படுகின்றன. தொழிற்சங்கத் தீர்வையே நிர்வாகம் ஏற்றுச் செயற்படும் நிலைமை அங்கு இருக்கின்றது.

இந்த வகையில் ஏற்றம்பெற சோவியத் யூனியனில் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் செந்நீர் சிந்தினர், தம் உயிர்களைத் தியாகம் செய்தனர்; சிறைகளை நிரப்பினர்; சொல்லொணாச் சித்திரவதைகளை அனுபவித்தனர். உரிமைப்போர் தொடுத்தவர்கள் மீது துப்பாக்கிச்சூடு, அடக்குமுறை, பொய்வழக்கு. ஆலைகளில் கதவடைப்பு போன்ற அடக்குமுறைகள் செய்தனர் இவற்றுக்கெல்லாம் பின்னர்தான் அங்கு பாட்டாளி வர்க்க அரசு உருவாயிற்று.

தொழிற்சாலைகள், தொழிற் சங்கச் செயற்பாடுகள், தொழிலாளர் உரிமைகள், தொழிலாளர் கடமைகள் பற்றி தொழில் வளர்ச்சி குன்றிய பின்தங்கிய விவசாய நாடுகளில் உள்ள மக்கள் இன்னும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை.

தொழிலாளர் எழுச்சி நாளான மே நாள் என்பது ஆலைத் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் மூலம் நடத்தும் விழா என்றும் வேலை நிறுத்தம், சம்பள உயர்வு, போனஸ், ஓய்வூதியம் என்பன பற்றி மட்டும்தான் மே நாளில் குரலெழுப்பலாம் என்றுதான் இன்றுள்ள பெரும்பாலான தொழிலாளர்கள் கூட எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

★ உண்மையில் மே நாளென்பது உலகம் முழுவதிலுமுள்ள தொழிலாளர்களின் மகத்தான திருவிழா.

★ தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திர விடுதலை உணர்வுகளுக்கு வித்திட்ட நாள்.

★ தமது வர்க்க உரிமைகளை நிலை நாட்ட, அடிமை விலங்கொடிக்க தொழிலாளர்கள் தமது உயிரையும் இழக்கத் தயாரான உணர்ச்சிமிகு திருநாள்.

★ சுரண்டல்களுக்கும், கொடுங்கோன்மைகளுக்கும் எதிராகத் தமது முன்னேற்றத்துக்கும் மகிழ்ச்சிக்குமான போராட்டத்துக்கு உலகத் தொழிலாளர்கள் அணி திரண்ட நாள்.

எனவே தொழிலாளர்கள் எழுச்சியை, விடுதலை உணர்வை வெளிப்படுத்தும் நாளாக மே நாளை நாம் கொண்டாட வேண்டும்.

சோவியத் யூனியனில் தொழிலாளர்கள் வெறும் தொழிற்சங்க நடவடிக்கையோடு நில்லாது தொழிலாளர் வர்க்கத்தின் பொதுவான அரசியல் சமுதாய இயக்கங்களிலும் முழுமையாக ஈடுபட்டு செஞ்சேனையில் அணி திரண்டு பாட்டாளிகளின் ஆட்சியை அங்கு நிறுவினர்.

''தொழிற் சங்கங்கள் ஆலை நிர்வாகத்தை எதிர்த்து உடனடிப் போராட்டத்தில் மட்டும் கவனம் செலுத்தினால் போதாது. அவை தொழிலாளர் வர்க்கத்தின் பொதுவான அரசியல் சமுதாய இயக்கங்களில் இருந்து விலகி நிற்கக் கூடாது'' என்றார் மாமேதை லெனின்.

தொழிலாளர் வர்க்கம் சுதந்திரமில்லாத நிலையில், அரசியலுரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், அரசியல் போராட்டத்தை முன்னெடுப்பது அவசியமாகும்.

இலங்கைத் தீவிலும் கடந்த நூற்றாண்டிலிருந்தே தொழிலாளர் நடவடிக்கைகள், வேலை நிறுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. 1919 இல் சேர் பொன்னம்பலம். அருணாசலம் அவர்களைத் தலைவராகவும், மலையகத் தமிழர் தலைவர் பெரி சுந்தரம் அவர்களைச் செயலாளராகவும் கொண்டு இலங்கைத் தொழிலாளர் நலச் சங்கம் (Ceylon Workers Welfare League) என்ற தொழிலாளர் அமைப்பு உருவானது. ஆரம்பத்தில் அந்த அமைப்பில் பணியாற்றிய A. E. குணசிங்கா என்ற சிங்களத் தலைவர் சர்வ ஜன வாக்குரிமையையும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையையும் முழுமையாக ஆதரித்தார்.

A. E. குணசிங்கா அரசியற்கட்சி ஒன்றை தொடங்கியதன் பின் வர்க்க நலனை விட இன நலனைப் பற்றியே அக்கறை கொண்டார். இறுதியில் சிங்கள இனவாதத்தைக் கக்கிய அவர் மலையகத் தமிழ்த் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்கக் கூடாது எனக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வந்தார். ஆரம்பத்தில் இன வேறுபாடற்ற தொழிலாளர்வர்க்க நலன்களுக்காக குரல் கொடுத்த A. E. குணசிங்கா பின்னர் வர்க்க நலன்களை இனவாதத்திற்குப் பலி கொடுத்து இன வெறியைக் கிளப்பினார்.

''அவ்வாறே, அரசாங்க பணியாளர் சங்கங்களில் அன்று சிறப்புற்று விளங்கிய அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் GCSU பல ஆயிரக்கணக்கான தமிழ் உறுப்பினர்களைக் கொண்டிருந்த போதிலும், அச்சங்கத்தின் வளர்ச்சிக்கு பல தமிழ் உறுப்பினர்கள் பெரும் சேவையாற்றியிருந்த போதிலும், தமிழர்களைப் புறக்கணித்த இனவாதத்தைக் கக்கியது.

(தொடரும்)

## மேதினத்தை முன்னிட்டு பருத்தித்துறையில் ஏற்பாடுகள்

மேதின எழுச்சியை ஊட்டு மூகமாக விடுதலைப்புலிகளின் பருத்தித்துறை கலை, கலாச்சார அவையினால் இப்பகுதி யெங்கும் தெருக்கூத்துக்கள் நடாத்தப்பட்டுவருகின்றன.

அத்துடன் மேதின விழாவுக்கான சகல ஏற்பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அரசதிணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள்சமூகசேவை நிறுவனங்கள் என்பன மேதினநடவடிக்கைகள் பற்றிய கூட்டங்களையும் நடாத்திவருகின்றன. (15)

## தீவக மக்கள் அகதிமுகாம்களுக்கு சுகாதார வசதி அளிக்கப்படுகிறது

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட தீவக அகதி முகாம்களுக்கு மாநகர சபை சுகாதாரப் பிரிவு குடிநீர், மலசலகூட மற்றும் மருத்துவ வசதிகளை நேற்று முதல் செய்துவருகிறதாக மாநகர வட்டாரங்கள் தெரிவித்தன.

மாநகர எல்லைக்குட்பட்ட 9 தீவக அகதி முகாம்களுக்கே தற்போது சுகாதார சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு அகதி முகாமிலும் குடும்பநல சேவையாளரின் உதவியுடன் முதலுதவிச் சிகிச்சை நிலையமும் அமைக்கப்பட்டு இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ப-11)

## யாழ் மாநகர வீதிகள் திருத்தும் வேலை ஆரம்பம்

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பழுதடைந்துள்ள வீதிகள் 'தார்' போட்டுத் திருத்தும் வேலைகள் தற்போது ஆரம்பித்துள்ளதாக மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

முதல் தடவையாக கச்சேரி - நல்லூர் வீதியும், நாவலர் வீதியும் திருத்தப்பட்டு வருகிறதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வீதிகள் கடந்த காலங்களில் மிகமோசமான பாதிப்புக்குள்ளாகிய வீதிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து ஏனைய வீதிகள் திருத்தும் வேலைகள் படிப்படியாக மேற்கொள்ளப்படவிருக்கிறது என்றார். (ப- 11)

## இரத்தினக்கல், தங்கப்பவுண் விழுங்கிக் கடத்த முயற்சி

65 இரத்தினக்கற்களையும் 6 தங்கப்பவுண்களையும் விழுங்கிக் கடத்த முயன்ற இரு முஸ்லிம் இளைஞர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்கப் பகுதியினரால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இவர்கள் இந்தியாவுக்குப் பயணம் செய்யவிருந்தபோது சுங்கப் பரிசோதனையின் போது இந்தக் கடத்தல் முறை தெரியவந்தது. (38)

கல்வி...

அறியவே இவ்வாறு பிறப்புச் சான்றிதழ் கோரப்பட்டதாகவும், தற்சமயம் இலங்கைத் தமிழர்களுக்கான மேற்கூறிய வெற்றிடங்கள் யாவும் போதியளவு நிரப்பப்பட்டு விட்டதாகவும் இனிமேல இலங்கைத் தமிழர் அல்லாதவர்களே இச்சேவையில் சேர்க்கப்படவுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (78)

வான் மீது...

விருந்து 500 யார் தொலைவில் வைத்து புலிகள் வான் மீது திடீர்த் தாக்குதல் நடாத்தினர்.

இதனால் மூன்று இராணுவத்தினர் பலியாகினர். ஒருவிமானி தப்பியோடிவிட்டார்

வானில் இருந்து ரி- 56- 3, ஐ எம் ரவைகள்- 60 என்பன புலிகளால் மீட்கப்பட்டன. (71)

ஐ. நா...

கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் நடைபெறமாட்டாதெனவும்இதுபற்றித் தாம் மேலதிக விசாரணை நடாத்துவதாகவும் கூட்டுப்படைத் தலைமையலுவலகம் இப் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது

இத் தாக்குதல்வேளை பதினைந்து ஐ நா. உதவிப் பொருட்களை ஏற்றிய லொறிகள் கொழும்பு சென்றதும் குறிப்பிடத்தக்கது. (ப 11)

4 லட்சம்...

பொருள்களை எடுத்து வந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார். (13)

### எழுத்தாளர் தேவை

தமிழ் நாவல் இலக்கியத்தில் ஆர்வமுள்ள எழுத்தாளர்கள் தேவை நேரடியாக ஆங்கிலத்திலிருந்து தமிழில்மொழி பெயர்க்கப்பட்ட நாவல்களை இலக்கியத் தரம் குன்றாது திருத்தி எழுதுவதற்கு தமிழ் எழுத்தாளர் தேவைப்படுகிறார்கள்.

நேரடித்தேர்வுக்கு 12-05-91ம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) தங்கள் தகுதிக்கான சகல ஆவணங்களுடன் கீழ் வரும் முகவரிக்கு சமுகம் தரவும்.

தர்சினி இல்லம்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

கு. மோகன்
சோழன்பதிப்பகம்

04137

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிகேஷன்ஸ், (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லஷ்மி'பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 30-04. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மொனராகல பாராவல தோட்டத்தில்

## இரண்டாவது தடவையாகவு[ம்] மலையகத்தமிழர் மீது தாக்[குதல்]

மொனராகல பாராவல தோட்டத்தில் இரண்டாவது தடவையாகவும் கடந்த புதன்கிழமை இரவு காடையர்களால் தாக்குதல் நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதலில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் அங்கிருந்த தமிழ்த்தொழிலாளர்கள் முந்நூற்று ஐம்பது பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

பொலிஸார் அளித்த பாதுகாப்பு உறுதியை தொடர்ந்து இவர்கள் தத்தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர்

ஆனால் அதே நாள் நள்ளிரவு வாகனத்தில் வந்த ஒரு கோஷ்டி தமிழர்களுடைய பயிர்களைத் தாக்கி கலை... விட்டு சென்றதாகவும் ... படுகிறது. இதனால் ... கள் காடுகளில் தஞ்சம் ... தனர்.

இதேவேளை இப்பகு... பகுதி பயணம் செ... சில தமிழரும் இறக்கப்... தாக்கப்பட்டதாக ... தொழிற் சங்க வட்டாரங்... தெரிவித்தன.

## கலைஞர்களுக்கு அழைப்பு

தமிழீழத்தின் சகல தரப்பினர் போல எழுத்தாளர், கவிஞர், கலைஞர்களும் தமக்கெதிரான இங்கை பௌத்த மேலாதிக்கவாதிகள் நடாத்தும் ஒடுக்குமுறைக்கு எதிராக போராட வேண்டிய நேரமிது. களத்தில் கால் பதித்து நிற்கும் விடுதலைப் புலிகளின் கரத்தைப் பலப்படுத்த வேண்டியகாலமிது.

தமிழீழக் கலைஞர்கள் விடுதலைப் புலிகளின் தலைமையில் தமக்கெதிரான சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிவதற்காக போர்க்கோலம் பூண்டு நிற்கிறார்கள் என்பதை இந்த மேதினத்தில் உலகிற்கு உணர்த்துவோம் என விடுதலைப் புலிகள் கலைகலாசாரப் பிரிவு விடுத்த மேதின அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 71

18 மாவீரர்...

தியுடன் சங்கமமாகின.

இதையொட்டி நேற்று கிளிநொச்சி சோகமயமாக காட்சியளித்தது. (71)

ஆனையிறவு...

ஷெல்-6, என்பனவே மீட்கப்பட்ட ஆயுதங்களாகும். ஆனையிறவு மோதலில் காயமடைந்த கவீத் சுப்பிரமணியம் (கிளிநொச்சி) நேற்று வீரமரணமடைந்தார். 71

புளொட்...

அன்று நடைபெற்ற தாக்குதலில் காயமடைந்த மேலும் ஒரு புளொட் குழு உறுப்பினர் நேற்று மரணமானார். (71)

மன்னாரில்...

★ ரி - 81 - 18
★ ரி - 56 மகஸீன் - 75
★ ரி - 81 மகஸீன் - 73
★ ஆர். பி ஜி ஷெல் - 5
★ ஆர் பி. ஜி - 2
★ 60 எம். எம் மோட்டார்-2
★ 60 எம். எம். ஷெல் - 12
★ ஜே. ஆர் கைக்குண்டு - 57
★ 7. 62 ஐ. எம் ரவைகள் - 10, 500
★ ஆர். பி. ஜி புரோபெலர் - 5
★ தகவல் தொடர்பு சாதனம் - 1 (71)

இலங்கை...

னேஷியா, பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளிடமிருந்து அதிக விலைக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆயுதம் வாங்குவதற்கு வேறு நாடுகளிடம் விடுத்த கோரிக்கைகளும் இன்னமும் எதுவித பதிலும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு நிதியுதவி அளிக்கும் நாடுகளும் அந்த நிதியை இராணுவ உபயோகத்துக்கு பயன்படுத்தக் கூடாது எனப் புதிய விதியை அறிவித்துள்ளன.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சு ஆயுதம் வாங்குவதற்கு கோரிய நிதியை திறைசேரி இதுவரை அனுமதிக்கவில்லை என பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

## பட்டப்பகலில் வீடு எரிந்தது 2 லட்சரூபா பொருள் சேதமான[து]

பண்டத்தரிப்பு, பிரான் பற்றிலுள்ள வீடு ஒன்று பட்டப்பகல் வேளையில் மிகவும் மர்மமான முறையில் தீப்பற்றி எரிந்ததினால் வீட்டிலிருந்த 27 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் உட்படகமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சாம்பராயின.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் பத்துமணி அளவில் பிரான் பற்றைச் சேர்ந்த சண்முகம் இராசரத்தினம் ...பவரின் வீடே இவ்வாறு இரையானது

வீட்டில் எதிர் பாராத ...மாக தீப்பற்றியதினால் வீ... சாயத் தேவைக்கென வாங்... வைக்கப்பட்டிருந்த 90 லீற்ற... மண்ணெண்ணெய் கொ... கலன் பயங்கர சத்தத்து... வெடித்து சிதறியதின... வீடு சுவாலை விட்டு எரி... தாக தெரிவிக்கப்படுகிறது.

## முல்லைத்தீவு மாவட்டத்திலும் மேதின ஏற்பாடுகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேதின முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் மாபெரும் மேதின எழுச்சியும் பேரணியும் நடாத்தப்படவுள்ளது.

புதுக்குடியிருப்பு சிவன் ஆலயச் சந்தியில் பிற்பகல் ஆரம்... மாகும் பேரணி மகாவித்... யாலயத்தைச் சென்றடை... ததும் விடுதலைப்புலிகள் ம... கள் முன்னணி பிர... களால் பொதுக் கூட்... நடாத்தப்படும். 3...

## வயோதிப தம்பதி திருமணப் பதி[வு] பேரன் சாட்சிக் கையொப்ப[ம்]

பேரப்பிள்ளைகள் பீட்டப்பிள்ளைகளைக் கண்ட வயோதிபத் தம்பதிகள் தமது 65 ஆவது வயதில் கடந்த வாரம் முறைப்படி திருமணப் பதிவு செய்து கொண்டனர்.

...அல்வாய் கிழக்கைச் சே... இத் தம்பதிகளின் தி... மணப்பதிவுக்கு இவர்க... பேரன் சாட்சிகளில் ஒரு... இருந்தமையும் குறிப்... தக்கது.

## வாகனக் கடத்தல் தோல்வி கடத்தல்காரர் கைக்குண்டு வீச்சு

எல்பிட்டியில் குளிர்பானவிற்பனைக்கு வந்த வாகனத்தைக் கடத்த எடுத்த முயற்சி தோல்வியடையவே கடத்தல்காரர் கைக்குண்டு வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குளிர்பான வாகனத்தில் வந்தவர்கள் கடத்தல்கார... போத்தலால் தாக்கியவ... டுத்து கைக்குண்டு வீசப்பட்... டது.

இதனால் வீதியில் ... வர்கள் இலேசி காய... தனர்.

பிரதமர் விஜேதுங்க கூறுகிறார்

## உள்ளூராட்சித் தேர்தல் முடிவு[கள்] இந்த அரசைப் பாதிக்காதா[ம்]

எதிர் வரும் உள்ளூராட்சித் தேர்தல்களின் முடிவினால் இந்த அரசை மாற்றமுடியாது. தொடர்ந்து இதே அரசுதான் அடுத்த ... ஆண்டுகளுக்கு ஆட்... இருக்கும். இவ்வாறு பிர... டி. பி. விஜேதுங்க நாவ... பிட்டி பிரசாரக் கூட்டத்... பேசுகையில் தெரிவித்தா...

உள்ளூராட்சித் தேர்த... முடிவுகள் வருட இறுதியி... பொதுத்தேர்தல் ஒன்... வழிவகுக்கலாம் என... பார்க்கப்பட்டமை... குறிப்பிடத்தக்கது.

### அவசர கூட்டம்

இன்றுகாலை 10.00மணிக்கு தீவகம், வலிகாமம் மாணவர் இயக்க உறுப்பினருக்கான கலந்துரையாடல் நல்லூர் யாழ் மாவட்டக் காரியாலயத்தில் (மாணவர் இயக்க) இடம் பெறும்.

இதேவேளை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஆசிரிய மாணவர்கள் இன்று காலை 10 மணிக்கு அந்தந்த கலாசாலைகளுக்கு தவறாது சமூகம் தரும் வண்ணம் பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர்கள் வேண்டியுள்ளனர். 71

## காரை அகதிகளு[க்கு] சர்வோதயம் உ[தவி]

காரை நகரிலிருந்து இ... பெயர்ந்துள்ள அகதிகள் ... மனலில் தங்கியுள்ள மூ... பிள்ளையார் ஆலயத்... சமீபமாகவுள்ள பிரதான... யில சர்வோதய இயக்... ளர் தாகசாந்தி நிலை... ஒன்றை திறந்துள்ளனர்.